**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

MCOP No:118/2021 நாள் 20.06.2025.

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக 2ம் எதிர்மனுதாரரின் போக்குவரத்து கழக்த்தில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.G.பொன்னுச்சாமி(1ம் எதிர்மனுதாரர்) ஆஜராகி ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | G.பொன்னுச்சாமி | தாலுகா | |
| த–பெ | கோபால் | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | கூனங்குளம் | வயது | 53 |

**முதல் விசாரணை**

எனது முதல் விசாரணையை பொறுத்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்**

1) 08.08.2024ம் தேதியிட்ட சி.சி.36/2021 தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் இருப்பு ஸ்ரீவில்லிபுத்தூர் தீர்ப்புரையின் கணினி நகல் **எ.ம.சா.ஆ.1**.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிராமண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளை நான் என் வழக்கறிஞரிடம் சொல்லி அவரால் தயார் செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்யதுள்ள சாட்சிய பிராமண பத்திரிக்கையில் இந்த சாட்சியின் வாக்குமூலமானதை எனக்காவும் நான் பணிபுரியும் தமிழ்நாடு போக்குவரத்து கழகம் சார்பாகவும் சேர்த்து தாக்கல் செய்வதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணியில் இருக்கும் பொழுது என்னுடைய பெயர் பொறுத்திய பேஜ் உள்ளது என்றால் சரிதான் ஆனால் நான் இன்று நீதிமன்றத்திற்கு அணிந்து வரவில்லை. அதுபோல் ஓட்டுநரானவர் ஓட்டுநர் எண் பொறுந்திய பேஜையும் அணிந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் 1991ம் ஆண்டு எல்.எல்.ஆர் சான்றிதழை வாங்கியிருந்தேன். அதன் பின்பு 1995 ஆம் ஆண்டு நான் கனரக ஓட்டுநர் உரிமத்தை வாங்கினேன். வாகனத்தை 3 கி.மீ துாரம் ஓட்டினால் அதற்கு கனரக ஓட்டுநர் உரிமம் வட்டார போக்குவரத்து அதிகாரி வழங்குவார். நான் 2008 ஆம் ஆண்டு ஓட்டுநராக பணியில் சேர்ந்தேன் மாதம் ஞாபகமில்லை. நான் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் தான் முதலில் ஓட்டுநராக பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். பணியில் சேரும் காலத்தில் பேருந்தை ஓட்டும் போது டீசல் சிக்கனம் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனை வழங்கியுள்ளது என்றால் சரிதான். ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து கிருஷ்ணபேரி ஊருக்கு செல்வதற்காக குறிப்பிட்ட நேரம் வகுத்து எங்கள்

நிறுவாகத்தால் வழங்கப்பட்டதா என்று கேட்டால் வழங்கப்பட்டது உண்மை. நான் ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நியைத்தில் இருந்து காலை 8.20 மணிக்கு டயம் எடுத்து பேருந்ததை எடுத்தேன். சம்பவ இடத்திற்கு சுமார் 10 நிமிட நேரத்திற்குள் வந்துவிட்டேன். பேருந்தை இயக்கும் போது ஓட்டுநர் என்ற முறையில் கவனமாக இயக்க வேண்டும் என்றால் சரிதான். வாகனம் ஓட்டிச்செல்லும் போது குறுக்கே எந்த வகையான வாகனமோ பொருட்களோ ஆட்களோ வந்தால் அந்த சமயத்தில் வாகனத்தில் பிரேக் போடப்படவேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிராமண பத்திரிக்கையில் இறந்துபோனவரின் மாத, ஆண்டு, வருமானம் பற்றி சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். இறந்துபோன அய்யனார் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சாலையின் இடதுபக்க ஓரமாக மெதுவாக தான் சென்றுகொண்ருந்தார் என்றும் நான் அரசு பேருந்தை அதிவேகமாகவும் ஆஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் பேருந்தை கவனமாக ஓட்டிசென்றால் அய்யனாருக்கு உயிர் சேதம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் இருசக்கர் வாகனத்தில் வந்தபோது அவர் தான் மணல் சருக்கி கீழே விழுந்ததாக சாட்சியம் அளிக்கிறார். விபத்து நடந்த சாலையானது பைபாஸ்சாலை என்றும் சாலையின் இடது பக்கமும் வலது பக்கமும் மணல் குவியல் இல்லை என்றும் நான் தான் அரசு பேருந்தை அதிக வேகமாவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் தான் விபத்து இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 20th day of June 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.